[முற்பகல் 10–20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று ரேஷனைப் பற்றிய விவாதம் இந்த மன்றத்தில் கொண்டு வரப்பட்டது. அரிசி கிடைப்பதில்லை என்ற பிரச்னையாதலால் அவசரமாக எடுத்துக் கொள்ளப் பெற்றது. 'பசி வந்தால் பத்தும் பறந்து போய்விடும்' அல்லவா, அதனால் அதன் அவசியத்தை முன்னிட்டு எடுத்துக் கொள்ளப் பெற்றது. ஒவ்வொரு நாளாக ஒவ்வொன்றாக எடுத்துக் கொள்ளப்பெறும், அதனால் பொறுத்திருந்துதான் பிரச்சினைகளைப் பார்க்க வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே அதேமாதிரி ஒன்றுக்கு மேலும் அவைத்தலைவர் விரும்பினால் எடுத்துக் கொள்ளலாம் என்று விதி இருக்கிறதே....

திரு. துரை முருகன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றுக்கு மேல் எடுத்துக் கொள்ளலாம் என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, அதை நீங்கள் எடுத்துக் கொள்ளலாம், அப்படி விதியில் இடம் இருக்கிறது.

திரு. என். வி.என்.சோமு : பேரவைத் தலைவர் அவர்களே, 90 லட்சம் பொருட்கள் ஏலத்தில் விடப்பட இருக்கின்றன, 5 பேர்கள் இறந்திருக்கிறார்கள். ஆகவே அப்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியாவது நீங்கள் இதை எடுத்துக் கொள்ள வேண்டும். தொழிலாளர்கள் பிரச்னை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது வரப்போவது தொழிலாளர்கள் சம்பந்தமான மானியக் கோரிக்கைதான் ; அதனால் தொழிலாளர் மானியக் கோரிக்கையின்மீது பேசும் போது இவற்றையெல்லாம் எடுத்துச் சொல்வதற்கு உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது.

ஆ. நடவடிக்கை குறிப்பில் விடுபாடு

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பாயிண்ட் ஆப் ஆர்டர் ரைஸ் பண்ண அனுமதி கோருகிறேன். நேற்றைய தினம் எங்களுக்கு கொடுகக்ப் பெற்றிருக்கும் நடவடிக்கைக் குறிப்பில், 54வது– விதியின் கீழ் கொண்டு வரப்பட்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கவன ஈர்ப்பில் ''சென்னை கொருக்குப்பேட்டையில் 2-7-1980 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் 300க்கும் மேற்பட்ட குடிசைகள் நாசமடைந்தது குறித்து என்பதின் கீழ் தீர்மானம் கொடுக்கப் பட்டவர்களின் பெயர்கன்ல் சில விடுபட்டிருக்கின்றன. அப்படிச் செய்வது முறையா எளி' ஏ'கட்கிறேன்.

1980 ஜூலை 15]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதையெல்லாம் அறையிலே வந்து கேளுங்கள் விவாதிக்கலாம். இப்போது தேவையில்லை, அடுத்து, 1980-81 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம். மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும். மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

7. வரவு-செலவுத் திட்டம் 1980-81 வாக்கெடுப்பு—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண். 29—தொழிலாளர் நலனும்—தொழிற்சாலைகளும்.

(ஆ) கோரிக்கை எண் 33—வீட்டு வசதி.

கோரிக்கை எண் 29

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநரின் பரிந்துரைமேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

மானியக் கோரிக்கை எண். 29 தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,39,40,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே வடஆற்காடு மாவட்டத்தில் வேலூரில் தொழிலாளர்களுக்கு தனியாக தொழிலாளர் நல ஈட்டுதவி மருத்துவமனை அமைக்க நிதி ஒதுக்கீடு செய்ய கோரி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 29 தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெற்ற ரூ. 6,39,40,000 விருந்து ரூ. 100 குறைக்க வேண்டும்.''

THIRU N. S. V. CHITHAN : To discuss about the failure of the Government to abolish employment of children below the age of 14 in hotels, tailoring shops, etc., I move:

"That the allotment of Rs. 6,39,40,000 under Demand No. 29 Labour including Factories, be reduced by Rs. 100."

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, ''தொழிற்சாலைகளில் சட்டத்திற்கு புறம்பாக ஒப்பந்தத் தொழிலாளர்களை வேலைக்கமர்த்துவதைத் தடுக்க உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப் படாமலிருப்பது குறித்து'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்: